**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 217/2023 P.W.8/L.W.8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு.மோகன் ஜோஸ்லின் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 16.04.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் காணொலி காட்சி மூலம் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது காவல்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். 14.05.2022 ம் தேதி குளச்சல் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக நான் பணிபுரிந்த போது 11.00 மணிக்கு ரீத்தாபுரம் அஞ்சல், இரும்பிலி, அப்பாவு மகள் தங்கலீலா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று புகார் மனுவின் தன்மைப்படி காவல்நிலையக்குற்ற எண். 138/2022, சட்டப்பிரிவுகள் 364, 294(பி), 354( பி) 506 பத்தி இரண்டு இ.த.ச 1860 ன் கீழ் வழக்குப்பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை** :

புகார் மனு கொடுப்பதற்கு அன்றையதினம் அசா1 தனியாக தான் வந்தார் என்றால் இல்லை, உடன் இரண்டு பெண்களும் வந்தார்கள். அவர்கள் பட்டியல் சாட்சி 2, 3 தானா என்றால் அது எனக்குத் தெரியவில்லை. என்னிடம் புகாார் அளிக்கும்போது வெள்ளியாக்குளம் பகுதியில் இருக்கும் பாம்புரி வாய்க்கால் என்று சொல்லியுள்ளரா என்றால் - ஆம் சொல்லியுள்ளார்.

2. அந்த இடத்திலிருந்து உப்பளம் இருக்கும் பகுதி சுமார் ஒன்றரை கி.மீதொலைவு இருக்கும் என்றால் அது எனக்கு தெரியவில்ல. ஆய்வாளருக்குதெரியும். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவுச் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.